DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM
Present : Thiru. C.Rajasekar, B.A, B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No.28 /2021**

**CNR.No: TNTH06-000046 -2021 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : மோகனலட்சுமி | Town | பண்ணைப்புரம் |
| Husband Name | : மாரிமுத்து | Occupation | : |
| Age | : | **PW1** | |

---

நாள் :02.09.2024

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**1)** 26.04.2017ம் தேதி நிர்மலாசிவாஜி, 2ம் பிரதிவாதி முகமது இப்ராகிமும் ஒரு கிரைய உடன்படிக்கை எழுதிக்கொண்டனர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த கிரைய உடன்படிக்கையின் படி வழக்கு சொத்தானது 2ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்று சொன்றால் சரியல்ல. வழக்குரைச்சொத்து தொடர்பாக வாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் இடையே அசல் வழக்கில் சமரசம் ஏற்பட்டு அசல் வழக்கு மற்றும் இப்ராகிம் தாக்கல் செய்த எதிர்கோருரிமை வழக்கு இரண்டும் அந்த அந்த தரப்பினர்களால் வாபஸ் பெறப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. ( 1ம் பிரதிவாதி மோகனலட்சமி தாக்கல் செய்த எதிர்கோருரிமை வழக்கு மட்டுமே தற்போது நிலுவையில் இருந்து வரும் நிலையில் மேற்படி எதிர்கோருரிமை வழக்கில் 2ம் பிரதிவாதி இப்ராகிம் தரப்பில் எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய இயலாது என்றும், வாதிடப்பட்டது. இதுகுறித்து 2ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கு தாக்கல் செய்த எதிர்கோருரிமை வழக்கினை அடிப்படையாக கொண்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்குமாறு வேண்டப்பட்டது. எதிர்கோருரிமை வழக்கினை இந்தநிர் எதிர்கோருரிமை வழக்கில்

எதிருரையாக பாவிக்க இயலுமா என்பது குறித்து வழக்கின் இறுதியில் தீர்மானித்து இந்த குறுக்கு விசாரணையின் ஏற்புடைமை குறித்து தீர்மானிக்கப்படும் என்று முடிவு செய்து குறுக்கு விசாரணை செய்ய ஆட்சேபனையுடன் அனுமதிக்கப்படுகிறது.)

2) வழக்குரை சொத்திற்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், நான் பொய்யான சங்கதிகளை கூறி இந்த எதிர்கோருரிமை வழக்கினை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. அதன்படி என்னுடைய எதிர்கோருரிமை வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிவுற்றது)**

(ஒ.ம்) C. ராஜசேகர், B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.